Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 136

சனிக்கிழமை
11 ஏப்ரல் 2026

பங்குனி 27 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –12
விலை – ரூபா 50



# எரிபொருள் தட்டுப்பாடு இலங்கையில் ஏற்படாது

## சீனா துணைநிற்கும் என்று தூதுவர் ஷென்ஹொங் உறுதி

**கொழும்பு, ஏப்ரல் 11**

**இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு எந்தச் சூழலிலும் இடமளிக்கப் போவதில்லை என, இலங்கைக்கான சீனத் தூதுவர் ஷென்ஹொங் தெரிவித்துள்ளார்.**

»11

பண்டிகைக் காலத்தில்

## மின்சக்திப் பயன்பாட்டில் சிக்கனத்தைப் பேணுக!

**இல்லையேல் கடும் நெருக்கடிகள் ஏற்படும் ஆற்றல் அதிகாரசபைத் தலைவர் தெரிவிப்பு**

கொழும்பு, ஏப். 11
பண்டிகைக் காலத்தில் மக்கள் மின்சாரத்தை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். இல்லையேல் நெருக்கடிகள் உச்சம் பெறும் - இவ்வாறு ஆற்றல் அதிகாரசபையின் தலைவர்

»11

## தரமற்ற நிலக்கரி இறக்குமதி விசாரிப்பதற்கு நடவடிக்கை!



கொழும்பு, ஏப். 11
நிலக்கரி தொடர்பான பிரச்சினையை ஆராய்வதற்காக ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

வலுசக்தி அமைச்சர்

»11

தேசியத்தில் சம்பியனான

## சென். மேரிஸ் அணியை கௌரவிக்கத் தீர்மானம்!

யாழ்ப்பாணம், ஏப். 11
அண்மையில் நடைபெற்ற தேசிய மட்டக் கால்பந்தாட்டத் தொடரில் சம்பியனான நாவாந்துறை சென். மேரிஸ் அணியைக் கௌரவிப்பது என யாழ்ப்பாணம் மாநகரசபை தீர்மானம் எடுத்துள்ளது.
யாழ்ப்பாணம்

»11

வலுசக்தி அமைச்சருக்கு எதிரான

## நம்பிக்கையில்லாத் தீர்மானம் 104 வாக்குகளால் தோல்வி!

கொழும்பு, ஏப். 11
வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம், 104 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது.
தரமற்ற நிலக்

»11

இலங்கைக்கு

## 700 மில்லியன் டொலர்; ஐ.எம்.எப். இணக்கம்!

கொழும்பு, ஏப். 11
இலங்கைக்கு 700 மில்லியன் டொலர் கடனுதவியை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் மட்டத்தில் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது.
இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைக்கு நாணய நிதியம் தொடர்ச்சியாக உதவி வழங்கி

»11

## காக்கைதீவு மறுசுழற்சி மையம் குப்பைக்கிடங்காகச் சீரழிவு

தீப்பரவலுக்கும் அதுவே காரணம்
உறுப்பினர் மதுசிகான் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஏப். 11
யாழ்ப்பாணம் மாநகர சபையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள காக்கைதீவு மறுசுழற்சி மையம் குப்பைக் கிடங்காக மாறியுள்ளது என்று, அந்தச் சபையின் உறுப்பினர் மதுசிகான்

»11

கிளிநொச்சியில் யானைகள் அச்சுறுத்தல்

## பாதுகாப்பு வேலிகளை அமைக்கும் பணி தீவிரம்

விரிவு பக்கம்:-11

## இலங்கைப் பொருளாதாரம் இவ்வருடம் வீழ்ச்சியடையும்

விரிவு பக்கம்:- 02




ஈரான் மீதான ஆக்கிரமிப்பு

## அமெரிக்காவைக் கண்டித்து யாழில் நேற்றுப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 11
ஈரானுக்கு எதிராக அமெரிக்காவால் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கையைக் கண்டித்து, யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் நேற்றுப் போராட்டம் இடம்பெற்றது.
புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்றுக் காலை 10 மணியளவில் இந்தப்

»11



முச்சந்தி முராரி

"நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிச்சுப் போட்டு பிறகென்னத்துக்கு ஆணைக்குழு அமைக்கினமாம்?"

ஆலயத்தின் புனிதச் சூழலில்

## யாழ். மாநகரசபையில் வெள்ளியன்று மாமிசம்

உறுப்பினர் குமணதாசன் காட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 11
நல்லூர் ஆலயத்தின் புனிதச் சூழலில் அமைந்திருந்த அசைவ உணவகம் ஒன்றுக்கு எதிராகப் போராட்டம் நடத்தி அதற்குத் தடை விதித்துவிட்டு, யாழ்ப்பாணம் மாநகரசபையில் வெள்ளிக்கிழமையில் மாமிசம் உண்கின்றனர் - இவ்வாறு யாழ். மாநகர

»11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|
| திகதி 10.04.2026 | திகதி 10.04.2026 | திகதி 10.04.2026 | திகதி 10.04.2026 | திகதி 10.04.2026 | திகதி 10.04.2026 | திகதி 10.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4402 | சீட்டிழுப்பு இலக்கம் 1469 | சீட்டிழுப்பு இலக்கம் 0428 | சீட்டிழுப்பு இலக்கம் 2508 | சீட்டிழுப்பு இலக்கம் 6160 | சீட்டிழுப்பு இலக்கம் 2190 | சீட்டிழுப்பு இலக்கம் 0276 |
| ஆங்கில எழுத்து S | வெற்றி இலக்கினம் ரிஷபம் | ஆங்கில எழுத்து M | ஆங்கில எழுத்து R | ஆங்கில எழுத்து A | ஆங்கில எழுத்து G | வெற்றி இலக்கினம் தனு |
| | | | சுப்பர் இலக்கம் 23 | | | |
| வெற்றி இலக்கங்கள் 09 39 44 76 | வெற்றி இலக்கங்கள் 06 18 25 39 | வெற்றி இலக்கங்கள் 1 9 6 6 | வெற்றி இலக்கங்கள் 17 25 29 49 | வெற்றி இலக்கங்கள் 6 9 1 3 6 1 | வெற்றி இலக்கங்கள் 01 16 55 82 | வெற்றி இலக்கங்கள் 05 29 52 |
| விசேட எழுத்து S | | | | | விசேட எழுத்து G | |

# இலங்கைப் பொருளாதார வளர்ச்சி இந்த ஆண்டு வீழ்ச்சியடையும்!

## ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவிப்பு

**கொழும்பு, ஏப்.11**

**2025ஆம் ஆண்டில் காணப்பட்ட 5.0 சதவீத இலங்கையின் பொருளாதார வளர்ச்சியானது 2026 இல் 4.0 சதவீதமாக வீழ்ச்சியடையும் என ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.**

மத்திய கிழக்கு மோதலானது, அபிவிருத்தியடைந்து வரும் ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியத்தின் பொருளாதார நிலைவரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பநிலை ஸ்திரத்தன்மை நிலவும் சூழலில், பிராந்திய வளர்ச்சியானது 2026 மற்றும் 2027 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் 5.1 சதவீதமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதிகரித்த எரிசக்தி விலைகள் உற்பத்திச் செலவுகளையும் நுகர்வோர் விலைகளையும் உயர்த்தும் அதேவேளை, அமெரிக்க சுங்கவரி அதிகரிப்புக்கு முன்னதாகவே கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அதீத ஏற்றுமதி நடவடிக்கைகளைத் தொடர்ந்து, ஏற்றுமதி வளர்ச்சி வழமைக்குத் திரும்பும்.

2025ஆம் ஆண்டில் பல பொருளாதாரங்களில் தணிந்திருந்த பணவீக்கம், மோதல்களுடன் தொடர்புடைய அதிக எரிசக்தி விலைகளின் தாக்கம் காரணமாக, இந்த ஆண்டு 3.6 சதவீதமாக உயரும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. 2027 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியானது 4.2 சதவீதமாகச் சிறியளவில் அதிகரிக்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. பணவீக்கமானது 5.2 சதவீதமாக உயர்ந்து, பின்னர் 2027 இல் 4.0 சதவீதமாகத் குறைவடையும் என ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது. (எ-இ)

## எரிபொருள் விலையேற்றம்; முடங்கும் அபாய நிலையில் விவசாய விநியோகச் சங்கிலி!

கொழும்பு, ஏப்.11

எரிபொருள் விலையேற்றம் மற்றும் போக்குவரத்துச் செலவு அதிகரிப்பு காரணமாக, இலங்கையின் பிரதான பொருளாதார மையங்களின் வர்த்தக நடவடிக்கைகள் முடங்கியுள்ளன என்று தம்புள்ள விசேட பொருளாதார மையத்தின் வர்த்தக சங்கத் தலைவர் சி.ஏ.சிறிவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கடந்த ஆண்டு இதே காலப்பகுதியில் நாள் ஒன்றுக்கு 6 இலட்சம் கிலோ காய்கறிகள் வந்த நிலையில், தற்போது அது 1.5 இலட்சம் கிலோவாகக் குறைந்துள்ளது.

தம்புள்ள மையத்துக்கு நேற்றுமுன்தினம் 15 இலட்சம் கிலோ காய்கறிகள் வந்தபோதிலும், கொள்வனவு செய்ய வியாபாரிகள் இல்லாததால் வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் செலவை ஈடுகட்ட முடியாமல், இரண்டு அல்லது மூன்று வியாபாரிகள் இணைந்து ஒரே லொறியில் காய்கறிகளை ஏற்றிச் செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். பொதுவாக மாலை வரை சுறுசுறுப்பாக இயங்கும் பொருளாதார மையங்கள், தற்போது வியாபாரிகள் வராத காரணத்தினால் நண்பகல் 12 மணிக்கே மூடப்படும் சூழல் உருவாகியுள்ளது.

அதேவேளை, அதிக எரிபொருள் செலவை ஈடுகட்ட வியாபாரிகள் நுகர்வோருக்கு விற்கப்படும் காய்கறிகளின் விலையை உயர்த்த வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகியுள்ளனர்.

எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் காரணமாக நாட்டின் ஒட்டுமொத்த விவசாய விநியோகச் சங்கிலியும் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது- என்றார். (ச-இ)

## வடக்கு ரயில் சேவை மீண்டும் வழமைக்கு

கிளிநொச்சி, ஏப்.11

'டித்வா' சூறாவளி காரணமாகப் பாதிக்கப்பட்டிருந்த வடக்கு மாகாணத்துக்கான புகையிரத சேவைகள், தண்டவாளங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் புனரமைக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் முதல் மீண்டும் வழமைக்குத் திரும்பியுள்ளன.

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்ட முதலாவது புகையிரதம், காலை 11.15 மணி அளவில் கிளிநொச்சி புகையிரத நிலையத்தை வந்தடைந்தது. சூறாவளி மற்றும் கடும் மழை காரணமாக வடக்கு புகையிரதப் பாதையின் பல இடங்களில் மண்சரிவுகள் மற்றும் மரம் முறிந்து விழுந்ததினால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-113)

## பாடசாலை விடுமுறை

கொழும்பு, ஏப்.11

அரச மற்றும் அரச அனுமதியின் கீழ் இயங்கும் தனியார் பாடசாலைகளுக்கான முதலாம் தவணையின் இரண்டாம் கட்ட கற்றல் செயற்பாடுகள் நேற்றுடன் நிறைவடைந்துள்ளது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. பாடசாலைகளுக்கு இன்று முதல் எதிர்வரும் 19ஆம் திகதி வரையில் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. இரண்டாம் தவணைக்கான கற்றல் செயற்பாடுகள் எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன. இரண்டாம் தவணைக்கான கற்றல் செயற்பாடுகள் எதிர்வரும் ஜூலை மாதம் 24ஆம் திகதிவரை நடைபெறும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

**சுபிரி தன சம்பத** — திகதி: 10.04.2026 — தினம்: வெள்ளிக்கிழமை — வெற்றி வாரம்: 0868 — ஆங்கில எழுத்து: H — வெற்றி இலக்கம்: 8 2 3 1 1 2

**Super Ball DLB** — திகதி: 10.04.2026 — தினம்: வெள்ளிக்கிழமை — சீட்டிழுப்பு வாரம்: 3134 — ஆங்கில எழுத்து: S — வெற்றி இலக்கம்: 06 22 24 76

**சனிதா DLB** — திகதி: 10.04.2026 — தினம்: வெள்ளிக்கிழமை — ஆங்கில எழுத்து: J — வெற்றி இலக்கம்: 49 62 67 69 — வெற்றி வாரம்: 5295

**SASIRI DLB** — திகதி: 10.04.2026 — தினம்: வெள்ளிக்கிழமை — வெற்றி வாரம்: 0964 — வெற்றி இலக்கம்: 05 30 32

**லக்ன ராசி DLB** — திகதி: 10.04.2026 — தினம்: வெள்ளிக்கிழமை — மேஷம் — வெற்றி இலக்கம்: 01 33 39 55 — சீட்டிழுப்பு வாரம்: 4846

**KAPRUKA DLB** — திகதி: 10.04.2026 — தினம்: வெள்ளிக்கிழமை — ஆங்கில எழுத்து: O — சுப்பர் இலக்கம்: 20 — வெற்றி இலக்கம்: 17 23 24 61 — வெற்றி வாரம்: 2310

**அத கோடிபதி DLB** — திகதி: 10.04.2026 — தினம்: வெள்ளிக்கிழமை — ஆங்கில எழுத்து: F — வெற்றி இலக்கம்: 04 54 69 74 — வெற்றி வாரம்: 2960

## கொழும்பு ரயில் நிலையத்தை நவீனப்படுத்த நடவடிக்கை

கொழும்பு, ஏப்.11

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தின் தொல்பொருள் மதிப்பைப் பாதுகாத்து, பயணிகளுக்கு சர்வதேச தரத்திலான வசதிகளை வழங்கும் நோக்கில் புதிய அபிவிருத்தித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்திப் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன இந்தப் பணிகளைத் தொடங்கி வைத்தார். ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்புடன் 2,162.64 மில்லியன் ரூபா இந்தத் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அனைத்துப் பணிகளையும் எதிர்வரும் 15 மாதங்களுக்குள் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்போது மருதானை மற்றும் கொம்பனித் தெரு முனைகளில் உள்ள பழைய பாலங்களுக்குப் பதிலாக, மின்தூக்கிகள் மற்றும் நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நவீன பயணிகள் மேம்பாலங்கள் அமைக்கப்படும்.

பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் சகல வசதிகளையும் கொண்ட புதிய மூன்று மாடி சேவைக் கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்படும்.

நுழைவு மற்றும் வெளியேறும் வழிகளை நெறிப்படுத்த, மின் நுழைவாயில் வசதிகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மருத்துவர்கள் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது!

## நோயாளர்கள் பெரும் அசௌகரியம்

**கொழும்பு, ஏப்.11**

**அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நாடளாவிய ரீதியில் உள்ள மருத்துவமனைகளில் முன்னெடுத்துள்ள பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.**

பயிற்சிக்கு பின்னர் மருத்துவர்களுக்கான நியமனங்களை வழங்குவதில் சுகாதார அமைச்சு தமக்கு வழங்கிய உடன்படிக்கைகளை மீறியுள்ளது என்று தெரிவித்து, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நேற்றுமுன்தினம் காலை 8 மணி முதல் நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்து வருகின்றது.

பணிப்புறக்கணிப்புப் போராட்டம் காரணமாக மருத்துவமனைகளின் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்ததுடன், நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். வெளியிடப்பட்டுள்ள நியமனப் பட்டியலை உடனடியாக நீக்கி, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரை பணிப்புறக்கணிப்பு தொடரும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆயினும் நியமனங்கள் தொடர்பில் சங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதை சுகாதார அமைச்சர் இதுவரை நிராகரித்து வருகிறார். மருத்துவர்களின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக சுகாதார அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று ஒரு சந்திப்புக்கு அனுமதி வழங்கியிருந்த போதிலும், பணிப்புறக்கணிப்பு ஆரம்பிக்கப்பட்டதால் குறித்த பேச்சுவார்த்தையை நடத்தப்போவதில்லை என நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து உறுப்பினர்களுடனும் இன்று கலந்துரையாடி, அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் மருத்துவர் பிரபாத் சுகததாச தெரிவித்தார். (எ-இ)

## என்.டி.பி. வங்கி நிதி மோசடி; நாணயநிதியமும் கரிசனை

கொழும்பு, ஏப்.11

தேசிய அபிவிருத்தி வங்கியில் இடம்பெற்றுள்ள உள்ளக நிதி மோசடி தொடர்பான நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாகவும், இதுதொடர்பில் இலங்கை மத்திய வங்கியுடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் நடக்கின்றன என்றும் சர்வதேச நாணயநிதியம் தெரிவித்துள்ளது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட இலங்கைக்கான சர்வதேச நாணயநிதியத் தூதுக்குழுத் தலைவர் எவன் பாபஜார்ஜியோ இந்தத் தகவலைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது-

"இந்தச் சம்பவம் அமைப்பு ரீதியான பிரச்சினையாக இல்லாமல், நிறுவனமட்டத்துக்குள் மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டதாக" மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. பெரும் நிதி இழப்பு ஏற்பட்டிருந்தாலும், வங்கி போதுமான மூலதனத்துடனும் பணப்புழக்கத்துடனும் இயங்குகின்றது என்று மத்திய வங்கி மதிப்பிட்டுள்ளது.

வங்கியின் சாத்தியக்கூறு மற்றும் மூலதன விகிதங்கள் ஒழுங்குமுறை விதிகளின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச அளவைவிட மேலாக உள்ளதால், வங்கியின் நிலைத்தன்மைக்கு உடனடி அச்சுறுத்தல் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய வங்கி மற்றும் தேசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடல்களின் அடிப்படையில், வங்கியின் மேற்பார்வைச் செயல்முறைகளில் ஏற்பட்ட குறைபாடே இந்த மோசடிக்கான முக்கியமான காரணமாக இருக்கலாம்-என்றார். (எ-இ)

## சங்கக்காரவின் பெயரில் பரவும் போலிக்காணொலி

கொழும்பு, ஏப்.11

முன்னாள் கிரிக்கெட் அணித்தலைவர் குமார் சங்கக்கார பெரும் முதலீட்டு வாய்ப்பொன்றைப் பரிந்துரைப்பதாக சமூக ஊடகங்களில் பரவி வரும் காணொலி போலியானது என பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. Factcrescendo எனும் உண்மை கண்டறியும் இணையத்தளம் இதுதொடர்பில் முன்னெடுத்த விசாரணையில், இந்தக் காணொலி மற்றும் அதனுடன் தொடர்புடைய செய்திகள் ஒரு திட்டமிடப்பட்ட இணைய மோசடியின் ஒரு பகுதி என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

உள்ளூர் ஊடக இணையத்தளம் ஒன்றின் வடிவமைப்பை ஒத்தவகையில் தயாரிக்கப்பட்ட இவ்வாறான ஒரு போலிச் செய்தியில், குமார் சங்கக்கார மற்றும் பிரபல வர்த்தகர் ஒதாரா குணவர்தன ஆகியோர் இவ்வாறான முதலீட்டுத் திட்டங்களுடன் தொடர்புடையவர்கள் எனப் பொய்யாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

தற்போது இந்தச் செய்திகள் நீக்கப்பட்டு அல்லது மாற்றப்பட்டு, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பெயரையும் இதனுடன் தொடர்புபடுத்தி வேறு போலித்தகவல்கள் பரப்பப்பட்டு வருகின்றன. இவை முற்றாக மோசடியானவை என உறுதிப்படுத்தியுள்ள இலங்கை கணனி அவசரப் பிரதிபலிப்புத் தளம், இதுதொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என்று பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. (எ-இ)

## கமல் அமரசிங்கவின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, ஏப்.11



விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்கவை, எதிர்வரும் 20ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றினால் உத்தரவிடப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் கைதுசெய்யப்பட்ட அவர், நேற்று வெள்ளிக்கிழமை குருநாகல் பிலஸ்ஸ நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (எ-இ)




## பட்டப்பகலில.....!

நேற்றுக்காலமை யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில ஒரு பெரிய 'சீன்'. றோட் சிக்னல் தாண்டி மோட்டார் சைக்கிளில வந்த சிலரை, ஒரேஞ்ச் கலரில ஒரே மாதிரி உடுப்பும் முகமூடியளும் போட்டுக்கொண்டு நிண்ட கும்பலொண்டு திடீரெண்டு பாய்ஞ்சுபோய் பிடிச்சு, அவையின்ர மோட்டார் சைக்கிளையும் இழுத்துக்கொண்டு போக, பார்த்துக்கொண்டு நிண்ட சனத்துக்கு பதறத் தொடங்கிட்டுது.'என்னடா இது இப்படி பட்டப்பகலில எங்கட கண்ணுக்கு முன்னால ஆக்களைக் கடத்துறாங்களே. அதுவும் சினிமாப் படங்களில வாற வில்லன் கோஷ்டி மாதிரி ஒரே மாதிரி உடுப்புப் போட்டுக்கொண்டு இந்த அக்கிரமத்தைச் செய்யிறாங்களே. அங்கால நிக்கிற பொலிஸ்கூட இவங்களை ஒண்டும் செய்யாமல் நிக்குது. பொலிஸூக்கும் ஏதும் காசைக் கீசைக் குடுத்துச் சரிக்கட்டி இருப்பாங்கள் போல' எண்டு அங்க நிண்ட சனங்கள் தங்களுக்குள்ள ரகசியமாக் கதைச்சினமே தவிர ஆரும் கிட்டப்போகேலை. கொஞ்சநேரம் சென்ட பிறகுதான் அந்தக் கும்பல் என்ன செய்யுது எண்டது எல்லாருக்குமே விளங்கிச்சுது.

முகமூடி போட்டுக்கொண்டு, ஒரேஞ்ச் கலர் உடுப்போட வந்தவை ஒண்டும் சும்மா போன ஆக்களைப் பிடிக்கேலை. சிவப்பு லைற் எரிஞ்சு கொண்டிருக்கேக்க அதைக் கண்டும் மதிக்காமல் போனவை, சிவப்பு லைற் எரியேக்க எந்தக் கோட்டில நிக்கோணுமோ அதைத் தாண்டிப் போய் முன்னுக்கு நிண்டவை எண்டு அந்த சிக்னலையும், வீதிப்பாதுகாப்பு விதியளையும் காலால மிதிச்சுக்கொண்டு போனவையத்தான் பிடிச்சு, அவைக்கு அட்வைஸ் சொல்லி அனுப் பினவை. வீதி விபத்துப் பற்றி ஆயிரக்கணக்கில கட்டுரை எழுதி, மணித்தியாலக்கணக்கா தொண்டை கிழியக் கத்தி சாதிக்க முடியாததை இப்பிடி ஒரு 'ஷொக் ட்ரீட்மென்ட்' குடுத்து எல்லாருக்கும் உறைக்கிற மாதிரி சாதிச்சிருக்கினம். கனபேர் நேற்றையோட றோட்டில போக்குவரத்து விதியளைச் சரியாக் கடைப்பிடிப்பினம் எண்டது விளங்கிட்டுது.

தங்களுக்கு எண்டொரு லாபமும் இல்லாம, சனத்தின்ர பாதுகாப்புக்காகத் தன்னார்வத்தோட வீதியில இறங்கின இந்தப் பெடியளைப் பாக்க, அடுத்த தலைமுறை எப்பிடி வரப்போகுதோ? எண்ட பயம் இல்லாமல் போய், ஒரு நம்பிக்கை வருகுது. குடியும், கும்மாளமும், மோட்டார் சைக்கிள் ரேஸூம், கையில பச்சையும், காதில கடுக்கனும், தொள தொள உடுப்பும், ரிக்ரொக்கில ரீல்ஸூம், வெளிநாட்டுக் காசில சுதியான வாழ்க்கையுமா இருக்கிற 'ஜென்ஸீ' பெடியளுக்குள்ள, இப்பிடி அடுத்தவையின்ர உயிரைப் பற்றிக் கவலைப்படுற பெடியளும் இருக்கிறாங்கள் எண்டதை நினைக்க பேரானந்தமாத்தான் இருக்குது. இப்பிடியான விழிப்புணர்வுகள் எல்லாரிட்டையும் வரவேணும். றோட்டுல போகேக்க, அடுத்தவையின்ர உயிரையும் மதிக்கப் பழகினால் தான், விபத்து எண்ட பேயிட்ட இருந்து தப்பலாம் கண்டியளோ!

padsi@uthayan.com – பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# பன்றித்தலைச்சி அம்மனின் கும்பாபிஷேகம் ஞாயிறன்று

யாழ்ப்பாணம், ஏப்.11
வரலாற்றுப் பிரசித்திபெற்ற மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.06 மணி முதல் முற்பகல் 10 மணி வரையுள்ள திருவோண நட்சத்திர சுப வேளையில் பக்திபூர்வமாக நடைபெறவுள்ளது. மகா கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்கக் கிரியைகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை07.46 மணியளவில் விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமானது.
இன்று சனிக்கிழமை காலை09 மணி முதல் மாலை03 மணி வரை அடியவர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் வைபவம் நடைபெறுமென ஆலய தர்மகர்த்தா தெரிவித்துள்ளார். (ச-66-9)



யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் மார்ச் மாதத்துக்கான கற்பகம் பத்திரிகை கொடிகாமம் சங்கத்தில், அதன் தலைவர் க.செல்வேஸ்வரனால் வெளியிடப்பட்டது. (க-17)





# கிளிநொச்சி விவசாயிகளுக்கு டீசல் விநியோகம் ஆரம்பம்!

கிளிநொச்சி, ஏப்.11
கிளிநொச்சி மாவட்டச் செயலர் தலைமையில், கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நேற்றுமுன்தினம் விவசாயிகளுக்கான எரிபொருள் விநியோகத்திட்டம் தொடங்கிவைக்கப்பட்டது.
சிறுபோக நெற் செய்கைக்காக நிலத்தைப் பண்படுத்தும் பணிகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 30 லீற்றர் டீசல் வழங்கப்படுகிறது. அந்தந்தப் பகுதி கமக்காரர் அமைப்புகளின் பரிந்துரையின் பேரில், கமநல சேவை நிலையங்களினால் உறுதிப்படுத்தப்பட்ட பற்றுச்சீட்டுகளைச் சமர்ப்பித்து இந்த எரிபொருளைப் பெற்றுக்கொள்ளமுடியும் என கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுப்பிரமணியம் முரளிதரன் தெரிவித்தார். (ச-113)

# ஞாயிற்றுக்கிழமையும் அழககங்கள் திறப்பு!

யாழ்ப்பாணம், ஏப்.11
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வாடிக்கையாளர்களின் வசதி கருதி, யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அழககங்களைத் திறப்பதற்கும், நேரக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அழககக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசச் செயலாளர் அறிவித்துள்ளார். புத்தாண்டுக்கு முன்னைய இறுதி மூன்று தினங்களான சனி, ஞாயிறு, திங்கட்கிழமை வரை நேரக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. யாழ். மாவட்ட அழககக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து அழகக உரிமையாளர்களும், வாடிக்கையாளர்களின் நலன் கருதி இந்தச் சலுகையைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ச-422)



# கூட்டுறவாளர்களின் கண்காட்சி ஆரம்பம்

சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டு,கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம் மற்றும் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை ஆகியவற்றின் அனுசரணையுடன் உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும், விற்பனையும் யாழ்.வீரசிங்கம் மண்டப வளாகத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டன.
இந்தக் கண்காட்சியை யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகரன் வைபவ ரீதியாக ஆரம்பித்துவைத்தார். இதில் யாழ். மாவட்டத்திலுள்ள கூட்டுறவு அமைப்புகளின் உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. தொடர்ந்து எதிர்வரும் 13ஆம் திகதி வரை கண்காட்சியும்,விற்பனையும் இடம்பெறும். (க-17)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மகிழ்ச்சி தரும் நாளாக இருக்கும். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தம் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. தந்தைவழியில் சில செலவுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சகோதரவகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு வெளியூரில் இருக்கும் கோயில்களுக்குச் சென்று தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** உற்சாகமான நாளாக இருக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

**கடகம்:** தாய்வழியில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்லவும். உறவினர்கள் வருகையால் சிலபிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**சிம்மம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. வாழ்க்கைத்துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

**கன்னி:** அதிர்ஷ்டம் தரும் நாளாக இருக்கும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். சிலருக்குக் கோயில்களுக்குச் சென்று வழிபாடுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சிலருக்கு நவீன டிசைனில் ஆடைகள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. குடும்பப் பொறுப்புகளின் காரணமாக அலைச்சல் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகை சில சங்கடங்களைத் தரும்.

**தனுசு:** கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். முக்கிய பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் ஆதாயமும் கிடைக்கக்கூடும்.

**மகரம்:** அதிர்ஷ்டகரமான நாளாக இருக்கும். சகோதரவகையில் ஆதாயம் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சிறுசிறு சலசலப்புகள் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** தெய்வ அனுக்கிரகம் நிறைந்த நாளாக இருக்கும். நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சி தரும்.

**மீனம்:** மனதில் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். தாயின் தேவையை நிறைவேற்ற சிறிது அலையவேண்டியிருக்கும். சிலருக்குப் பயணங்களால் அனுகூலம் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# கோரிக்கை வலுப்பெற..!


ஈழத்தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை முன்னிறுத்தி, இனப்பிரச்சினைக்கு அனைவரும் ஏற்கும் படியான தீர்வுத் திட்டத்தை உருவாக்கு வதற்காக விசேட வரைவுக்குழுவை அமைத்துள் ளது தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவை. தமிழ்த் தேசியக் கட்சிகளை ஓரணியில் இணைத்து, இனப் பிரச்சினைக்கான தீர்வைத் தேடும் நடவடிக்கை களை தமிழ்ச்சட்டத்தரணிகள் பேரவை அண்மைய நாள்களாக வெற்றிகரமாக முன்னெடுத்து வரு கின்ற நிலையில், இதன் பிரதான அம்சமாகவே ஈழத்தமிழர்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் வரைவுக்குழு உருவாக்கப்பட்டமை அமைகின்றது என்றால் அது மிகையல்ல.

2009ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் ஆயுதங் கள் மௌனித்த காலத்தில் இருந்து தற்போதுவரை ஈழத்தமிழர்களுக்கான அரசியற் தீர்வு தொடர்பில் இதுவரை அழுத்தம் திருத்தமான எந்தவொரு முன்மொழிவும் முன்வைக்கப்படவில்லை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒருபுறம், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மறுபுறம், தமிழரசுக் கட்சி இன்னொருபுறம் என வெவ்வேறு திக்குத் திசைகளிலேயே தமிழர்களின் அரசியல் அபிலாஷை கள் சார்ந்த நிலைப்பாடு முன்வைக்கப்பட்டதே தவிர, அவை பொதுமைப்படுத்தப்பட்ட விடயங்க ளாக அமையவேயில்லை. தமிழ்த் தேசியப் பரப்பில் கடந்த இரண்டு தசாப்தங்களாக இது பெரும் பலவீனமாகவே இருந்து வந்தது. ஈழத் தமிழர்களின் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் ஸ்ரீலங்கா அரசாங்கம் பாராமுகமாக இருந்ததற்கும், அரசு மீதான அழுத்தங்கள் குறைந்ததமைக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்குள் நிலவிய மாறு பட்ட கருத்துகள் மற்றும் முன்பின் முரணான நிலைப்பாடுகளும் ஒரு காரணமே.

இவ்வாறான நிலையில்தான், அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளையும் இணைத்து, வரைவுக் குழுவை அமைத்து, நிபுணத்துவப் பரிந்துரைகளின் அடிப்படையில் தமிழர்களுக்கான அரசியற் தீர்வு தொடர்பான முன்மொழிவைத் தயாரிக்க எத்தனித் திருக்கின்றது தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவை. இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கிய எமது பயணம் வேகமாகவும், துல்லியமானதாகவும் இருக்கவேண்டுமாயின், அதை நோக்கிய எமது பாதை தெளிவானதாக அமையவேண்டியது அவசியம். எனவே, காலத்தின் தேவையறிந்து மேற்கொள்ளப்பட்டிருக்கும் இந்த நடவடிக் கையை தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையினர் மிகுந்த சிரமத்துக்கு மத்தியிலாவது தொடர்ச்சியாக முன்கொண்டு செல்லவேண்டும். இந்த முன் னெடுப்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் தற்போது வரை ஒருமித்த கருத்துடன் பயணிப்பது நல்ல விடயம். இந்த ஒற்றுமை இறுதிவரை பேணப்பட வேண்டும் என்பதே ஈழத்தமிழர்களின் எதிர் பார்ப்பு.

இதேவேளை, ஈழத்தமிழர்களுக்கு சமஷ்டி உள்ளிட்ட அதிகாரப் பரவலாக்கத்தை வலி யுறுத்தும் சிங்கள இடதுசாரித் தலைவர்களையும் அரவணைத்து, அவர்களின் பங்குபற்றலுடன் இந்தத் திட்டத்தைத் தொடர்ச்சியாகக் கொண்டு செல்வதே உசிதமாக அமையும். எமக்காக நாம் குரல்கொடுப்பதிலும் பார்க்க, சிங்கள இனத்தில் இருந்து வெளிப்படும் ஆதரவுக் குரல்கள் இலகுவில் கேட்கப்படும். அத்தகைய ஆதரவு எம்மை மேலும் பலப்படுத்தும். எனவே, இந்த விடயத்தை தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையினர் கவனத்தில் எடுப்பது அவசியம்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## பொய்யாமொழி

**நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று**
**பண்பின் தலைப்பிரியாச் சொல்**

**பொருள்:** பிறர்க்கு நன்மையான பயனைத் தந்து நல்ல பண்பிலிருந்து நீங்காத சொற்கள், வழங்குவோனுக்கும் இன்பம் தந்து நன்மை பயக்கும்.




# எல்-நினோ நிலை ஏற்படின் செப்ரெம்பர் வரை வறட்சி!

## வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை

கொழும்பு, ஏப்.11

**தென்மேற்கு பருவமழைக்காலத்தில் எல்-நினோ நிலை ஏற்பட்டால், வரும் செப்ரெம்பர் மாதம் வரை வறட்சியான காலநிலை நிலவக்கூடும் என வளிமண்டல வியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

அரசாங்கத் தகவல் திணைக்களத் தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத் துத் தெரிவித்த அந்தத் திணைக் களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் அஜித் விஜேமான்னகே, இந்த நிலைமையைக் கருத்திற் கொண்டு குடிதண்ணீர் மற்றும் அனைத்து நீர்ப்பாசன நடவடிக்கை களிலும் முறையான நீர் முகாமைத் துவத்தை மேற்கொள்ளவேண்டும். தற்போது நிலவும் இந்த வெப்ப மான சூழல் இந்த மாதம் முழுவதும் ஏற்ற இறக்கங்களுடன் நீடித்து, அடுத்த மாதத்தின் முதல் இரண்டு அல்லது மூன்று வாரங்கள் வரை தொடரும் என எதிர்பார்க்கப்படுகின் றது. மே 20ஆம் திகதி அளவில் தென்மேற்கு பருவமழை ஆரம்ப மாகும். பருவமழை ஆரம்பிக்கும் போது வெப்பம் சற்றுக் குறையும். தற்போது உணரப்படும் கடுமை யான அசௌகரியமான நிலைமை மே மாதம் மூன்றாவது வாரத்துக்கு பிறகு பெரும்பாலும் நீங்கிவிடும். அதேவேளை, இந்த தென்மேற்கு பருவமழைக் காலத்தில் எல்-நினோ நிலை உருவானால் ஜூன், ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் மழை வீழ்ச்சி குறைந்து, செப்ரெம்பர் மாதம் வரை வறட்சி நிலவும். குறிப் பாக வருங்காலத்தில் இதுகுறித்து அதிக அவதானம் செலுத்தவேண்டி யிருக்கும் - என்றார். (ச-இ)



# காலியை வந்தடைந்தது 'சில்வர் டான்' கப்பல்

கொழும்பு, ஏப்.11

'சில்வர் டான்' எனப்படும் அதி சொகுசு உல்லாசக் கப்பல் சுமார் 1,007 பேரு டன் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலித் துறைமுகத்தை வந்தடைந் துள்ளது.

இந்தக் கப்பல், 213 மீற்றர் நீளமுடையதுடன், உயர்தர வசதிகளுடன் கூடிய 11 தளங்களைக் கொண்டுள் ளது. இந்த உல்லாசக் கப் பலில் வந்துள்ள சுற்றுலாப் பயணிகள், காலி கோட்டை, பலப்பிட்டிய மடு ஆறு, உன வட்டுன, ருமசல மற்றும் கொக்கல உள்ளிட்ட முக்கி யமான சுற்றுலாத் தலங் களுக்குச் செல்லத் திட்ட மிடப்பட்டுள்ளனர். (ச-இ)

# மீன்பிடிக்கச் சென்றவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

கொழும்பு, ஏப்.11

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முதலைக்குடா களப்பில் மீன்பிடிக்கச் சென்ற நிலையில் நீரில் மூழ்கி ஒருவர் உயிரிழந்துள் ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் கொக்கட் டிச்சோலை முனைக் காடு பகுதியைச் சேர்ந்த 57 வயதுடைய நபர் என அடையாளம் காணப்பட் டுள்ளார். (ச-இ)

# இலங்கைப் பெண் லெபனானில் காயம்

லெபனான் மீது நடத்தப்பட்ட தாக்குதல் களில் இலங்கைப் பெண் ஒருவர் சிறு காயங் களுக்கு உள்ளாகியுள்ளார் என்று தெரிவிக் கப்படுகிறது. காயமடைந்த பெண் தற்போது நலமுடன் இருப்பதாக பெய்ரூட்டில் உள்ள இலங்கைத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)



# 10 கிலோ கஞ்சாவுடன் சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஏப்.11

10 கிலோ 787 கிராம் கஞ்சாவுடன் சிலாபம் தெதுரு ஓயா பகுதியில் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய் யப்பட்டுள்ளனர்.

சிலாபப் பிரிவு போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய, நேற்று முன்தினம் வியாழக்கிழமை இந்தக் கைது இடம்பெற்றது. அத்துடன் சந்தேகநபர்களிடமிருந்து போதைப் பொருள் வியாபாரம் மூலம் ஈட்டப்பட்ட தாக சந்தேகிக்கப்படும் 128,000 ரூபா பணமும் கைப்பற்றப் பட்டுள்ளது.

32 வயதுடைய ஆணும், 26 வயது டைய பெண்ணுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை சிலாபம் பொலி ஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-இ)

**நாளை**
ஞாயிற்றுக்கிழமை - பங்குனி 29
12.04.2026
சுபநேரம் : 09.06 - 10.36
ராகுகாலம் : 04.36 - 06.06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## எரிபொருள் விநியோகம் வழமைக்குத் திரும்பியது

### வலுசக்தி அமைச்சர் தகவல்

கொழும்பு, ஏப்.11

தற்போது எரிபொருள் விநியோகக் கட்டமைப்பு வழமைக்குத் திரும்பியுள்ளது. எதிர்வரும் ஜூன் மாதம் வரையான காலப்பகுதிக்குத் தேவையான எரிபொருள் கையிருப்பில் உள்ளது என்று வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மத்திய கிழக்கு மோதல்களால் எரிபொருள் கப்பல்களுக்கான கட்டணம் மற்றும் காப்புறுதிக் கட்டணங்கள் உயர்ந்துள்ளன. அதனாலேயே எரிபொருள் விலை அதிரித்துள்ளது. போதுமான எரிபொருள் இருந்தபோதும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என்ற அச்சத்தில் பொதுமக்கள் வழமைக்கு மாறாக எரிபொருளை அதிகளவில் கொள்வனவு செய்ததால் எரிபொருளுக்கான கேள்வி அதிகரித்தது. அதனாலேயே வரிசைகள் ஏற்பட்டன. கொள்வனவு செய்யப்பட்ட எரிபொருள் கப்பல்கள் தொடர்ச்சியாக நாட்டுக்கு வரவுள்ளன. அதனால் எரிபொருள் விநியோகத்தில் எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது-என்றார். (எ-இ)

### இடர் நிலைமை உதவிகளை

# ராஜபக்சக்களைப் போன்று கொள்ளையிடவில்லை அரசு



### அமைச்சர் பிமல் தெரிவிப்பு

**கொழும்பு, ஏப்.11**

**இடர் நிலைமைகளின்போது கிடைத்த நிதியை ராஜபக்சக்களைப் போன்று கொள்ளையடிக்கவில்லை. ரணிலைப் போன்று நண்பர்களுக்குப் பகிர்ந்தளிக்கவில்லை. உருவாகியுள்ள நெருக்கடிகளை மே மாதம் 31வரை சமாளித்து முன்னோக்கிச் செல்லவேண்டும். எரிபொருள் விலை வெகுவிரைவில் குறைவடையும் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பூகோள ரீதியில் தோற்றம் பெற்ற நெருக்கடியை சிறந்த முறையில் ஜனாதிபதி முகாமைத்துவம் செய்துள்ளார். மத்திய கிழக்கு மோதல்களால் தோற்றம் பெற்ற தாக்கங்களால் ஏற்பட்ட நெருக்கடிகளை அர்சாங்கம் என்ற அடிப்படையில் முகாமைத்துவம் செய்துள்ளோம்.

இலங்கையில் மட்டுமே எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்ட என்ற நிலைப்பாட்டில் இருந்துகொண்டு எதிர்க்கட்சியினர் கருத்துகளைத் தெரிவித்து வருகின்றனர். எடுக்கப்பட்ட கடுமையான தீர்மானங்களாலேயே தற்போது எரிபொருள் விநியோகம் வழமைக்குத் திரும்பியுள்ளது. நெருக்கடியான நிலைமைகளில் ராஜபக்சக்களைப் போன்று நாணயம் அச்சிட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்கமுடியாது. அவ்வாறு செய்தால் பொருளாதாரம் பாதிப்படையும். பொருளாதார ரீதியில் ஜனாதிபதி கடைப்பிடித்த இறுக்கமான கொள்கையாலேயே திறைசேரியின் கையிருப்பு உயர்ந்துள்ளது. நெருக்கடி நிலைமையை அனைவரும் ஒன்றிணைந்து எதிர்கொள்ள வேண்டும். எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகள் ஒருவாரத்துக்குக்கூடச் செல்வாக்கு செலுத்தாது-என்றார். (எ-இ)



## தாமரைக்கேணி மக்களின் தேவைப்பாடுகள் ஆராய்வு

முல்லைத்தீவு, ஏப்.11

குமுழமுனை கிழக்கு, தாமரைக்கேணிப் பகுதியைச் சேர்ந்த மக்களின் குறைபாடுகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்காக, நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் குறைகேள் சந்திப்பொன்றை நடத்தியுள்ளார். அங்கு நேரில் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் மக்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள், குறைபாடுகளை விரிவாகக் கேட்டறிந்தார்.

காணிகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்காமை, உள்ளக வீதிகள் சட்டவிரோதமாக மூடப்பட்டிருப்பதுடன், அகலப்படுத்தப்படாமலும் காணப்படுதல், வீதிகள் புனரமைப்பு, வடிகாலமைப்பு வசதி, போர்க்காலப்பகுதியில் ஏற்பட்ட சொத்தழிவைப் பெற்றுக்கொடுத்தல், வீதி விளக்குகளைப் பொருத்துதல், சிறுகடற்றொழிலாளர்கள் பயன்படுத்தும் வீதியைச் சீரமைப்புச் செய்தல், மின்னிணைப்பு இல்லாத வீடுகளுக்கு மின்னிணைப்புகளைப் பெற்றுக்கொடுத்தல், அஸ்வெசும நலன்புரித்திட்டக் கொடுப்பனவு வழங்கலில் உள்ள முறைகேடுகள் உள்ளிட்ட பல கோரிக்கைகள் மக்களால் நாடாளுமன்ற உறுப்பினரிடம் முன்வைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (க-246)



யாழ்.மாவட்டச் செயலகத்தில் உள்ள சிற்றுண்டிச்சாலை புனரமைக்கப்பட்டு ஆரோக்கிய உணவகமாக, மாவட்டச் செயலர் ம.பிரதீபனால் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது. (க-17-66)

## இ.போ.ச. சாரதி, நடத்துநருடன் முரண்பாடு; தனியார் பஸ் உரிமையாளருக்குத் தடை

யாழ்ப்பாணம், ஏப்.11

காரைநகர் வழித்தடத்தில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டிருந்த, இலங்கை போக்குவரத்துச் சபைப் பேருந்தின் சாரதி மற்றும் நடத்துநருடன் பாரதூரமான முரண்பாட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், தனியார் பேருந்து உரிமையாளருக்கு ஒரு மாதம் பணித்தடை விதிக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் சூ.விமலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற சம்பவம் தொடர்பான விசேட விசாரணைகள், வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் கிளிநொச்சித் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

விசாரணையின்போது தனியார் பேருந்து உரிமையாளர் குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டார்.

அதனடிப் படையில் அவர் வடக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் வழியனுமதிப் பத்திரத்தின் கீழ், பதிவுசெய்யப்பட்ட எந்தவொரு பேருந்திலும் பணியாற்றுவதற்கு ஒரு மாதம் முழுமையான பணித்தடை விதிக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (க-66)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறுகைக்கான அழைப்பு
### வாடகை அடிப்படையில் வாகனப் பெறுகை
### மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்
NP/20/FB/VE.RE/GEMP/2026

1. மாகாணக் கல்வித் திணைக்களப் பெறுகைக்குழு (பெரியது) மூலம் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பாவனைக்கென வாடகை அடிப்படையில் வாகனம் ஒன்றினை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
2. பெறுகைகள் அனைத்தும் தேசிய போட்டி விலைக்கேள்வி அடிப்படையில் நடைமுறைப் படுத்தப்படும்.
3. தகுதியான கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் தமது பெயர் வராது இருப்பதனை உறுதிப்படுத்தி கீழ்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
   - வாகனத்தின் பதிவுச்சான்றிதழ் வடக்கு மாகாணத்திற்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்
   - வாகனத்தின் முதல் பதிவு திகதி 28.01.2016 திகதி அல்லது அதற்கு பின்னரான திகதியாக இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரர் பெறுகை உள்ளடக்கம் பகுதி II இல் கூறப்பட்ட தகைமைகளினை நிறைவுசெய்திருத்தல் வேண்டும்.
5. வழங்குநர்கள் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணம் 3,500.00 இனை இலங்கை வங்கியின் "0005932043" இலக்கத்திற்கு வைப்புச்செய்து பற்றுச்சீட்டினை அலுவலகத்தில் செலுத்தி பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாட்களில் 15.04.2026 தொடக்கம் 29.04.2026 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
6. இது தொடர்பான பெறுகை முன்னறிவிப்பு கூட்டம் (Pre bid meeting) 22.04.2026 காலை 10.00 மணிக்கு வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.
7. மேலதிக விபரங்களினை அலுவலக நேரங்களில் பிரதம கணக்காளர் வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். 021 - 224 2646
8. விலைக் கேள்விகள் 30.04.2026ம் திகதி 10.00 மணிக்கு முன்பதாக வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பிரதம கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
9. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்த வொரு நிலையிலும் விலைக்கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்குத் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவருக்கு பூரண அதிகாரமுள்ளது.

**தலைவர்,**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர்**
**மாகாணக் கல்வித்திணைக்களம்**
**திணைக்கள பெறுகைகள் குழு (பெரிது),**

(Cr 47395) N-1



## மூன்றாம் ஆண்டு நினைவுநாள்

அமரர் கலைஞானச்சுடர் கலாபூஷணம்

## வல்லிபுரம் கற்கண்டு

**தோற்றம்**
**16.12.1943**

**மறைவு**
**11.04.2023**

கவலைகள் கரைத்திடும் அருமருந்தாம் காலம்
காலனவன் தந்தகாயம் கண்களில் நீர்க்கோலம்
கலங்கரை விளக்கது கனலிலே இருண்டதே ஞாலம்
கண்கள் காண ஏங்குதய்யா உங்கள் திருக்கோலம்

மெழுகாய் நீருருகி மேதினிக்கு எமைக்காட்டினீர்
முடிகளை நாம் சூட முட்களை நீர் சுமந்தீர்
முழுதாய் மூன்றாண்டு மறைந்தோடிப் போனதையா
மூச்சாயுன் நினைவுகள் நெஞ்சை விட்டகலாதய்யா

ஆயிரம் உறவுகள் அருகிருந்தும் ஐயாய்
ஆற்றித் தேற்றிட நீயில்லையே தாயாய்
ஆகிட வேண்டும் எழு ஜென்மமுன் சேயாய்
ஆண்டவனைத் துதிக்கின்றோம் அனுதினம் மெய்யாய்

**- குடும்பத்தினர்**

(CR 47398)

# மரண அறிவித்தல்

## சரோஜினிதேவி தம்பிஐயா (தனம்)



**தோற்றம்**
**16.12.1934**

**மறைவு**
**09.04.2026**

இணுவில் மேற்கு இணுவிலை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சரோஜினிதேவி தம்பிஐயா (தனம்) அவர்கள் 09.04.2026 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தங்கராசம் தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை தங்கமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தம்பிஐயாவின் (மேற்பார்வையாளர், துறைமுக அபிவிருத்தி அதிகாரசபை) அன்பு மனைவியும், சண்முகமலர், சரவணபவன் (பரன் - ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், குகதாசன் (முன்னாள் பிராந்திய முகாமையாளர் - மக்கள் வங்கி), தர்மினி (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும், Dr. சயந்தி (யாழ். போதனா வைத்தியசாலை), சங்கீர்த்தனன் (Biomedical Engineer-Maingate Pvt Ltd - Colombo), தர்சா (Germany), தனுசா (Germany), தரணிகன் (Germany), Dr. நந்தகுமார் (PMCU-வட்டுக்கோட்டை), அமுதப்பிரியா (Software Engineer) ஆகியோரின் பேர்த்தியும், திவக்சி, ஜிவந்தி ஆகியோரின் பூட்டியும், கமலாதேவி, சகுந்தலாதேவி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சின்னராஜா மற்றும் தியாகராஜா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.04.2026) ஞாயிற்றுக கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பாப்பா தோட்ட லேன்,**
**இணுவில் மேற்கு,**
**இணுவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(cs61188) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# புத்தாண்டு விளையாட்டுகளை ஏற்பாடு செய்வதில் அவதானம்

நாட்டில் தற்போது நிலவும் கடும் வெப்பமான காலநிலை காரணமாக, புத்தாண்டு விளையாட்டு விழாக்களை ஏற்பாடு செய்யும் போது மிகுந்த அவதானத்துடன் செயற்படவேண்டும் என்று சுகாதாரத் துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

வெளிப்புறங்களில் நடத்தப்படும் விளையாட்டு நிகழ்வுகளை காலை 10 மணிக்கு முன்னதாக நிறைவு செய்யவேண்டும் என்று கொழும்பு தேசிய மருத்துவமனையின் விளையாட்டுத் துறை மருத்துவ நிபுணர் ருவான் ஜயசூரிய தெரிவித்துள்ளார். போட்டிகளில் பங்கேற்பவர்கள் போதுமான அளவு தண்ணீர் குடித்து உடலை நீரேற்றத்துடன் வைத்திருக்கவேண்டும். அதிகப்படியான களைப்பு அல்லது தசைப்பிடிப்பு ஏற்பட்டால், அது வெப்ப அதிகரிப்பின் அறிகுறியாகும். அத்தகைய நிலையில் உடனடியாக விளையாட்டிலிருந்து விலகி, நிழலான இடத்திற்குச் சென்று நீரைக் குடித்து உடல் வெப்பத்தைத் தணித்துக் கொள்ள வேண்டும். விழா ஏற்பாட்டாளர்கள் விளையாட்டு மைதானங்களில் குளிர்ந்த நீர் மற்றும் ஐஸ் கட்டிகள் போன்ற முதலுதவி வசதிகளைத் தயார்நிலையில் வைத்திருப்பது அவசியமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ-இ)

**மாபிள் வேலை**

தரமான முறையில் மாபிள் பதித்துத் தரப்படும்.

1 சதுர அடி - 110 ரூபா

தொடர்பு: **076 470 4894**

(CS61167) N-1

- வன்னி, கிளிநொச்சி
ப.நெ.வ.அ.கூ.நி. பேரிணையம் (வ/து)
A-09 வீதி, கிளிநொச்சி
தொலைபேசி இலக்கம் - 0212283696, 0217200456

**மூடிய கூறுவிலை கோருதல்**

FZ-S VER 3 0 மோட்டார் சைக்கிள் 2020ல் உற்பத்தி செய்யப்பட்டது (NP BIP XXXX) விற்பனைக்காக 09.04.2026ந் திகதியில் மூடிய கூறுவிலை கோரப்படுகின்றது. விண்ணப்பங்கள் 23.04.2026 ந் திகதிக்கு முன்னர் மேற்படி முகவரிக்கு தலைவரிற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். இத்திகதிக்கு பின்னர் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது விண்ணப்பங்கள் 23.04.2026ந் திகதி மு.ப.10.00 மணிக்கு திறக்கப்படும். விண்ணைப்பப் படிவங்கள் அலுவலகத்தில் பெறப்பட்டு பூர்த்தி செய்து மீளப் பெற்றுக்கொள்ள முடியாத பணம் ரூபா:- ஐந்நூறினை (500.00) செலுத்தி நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ சமர்ப்பித்தல் வேண்டும். அலுவலக நேரத்தில் (8.30Am - 4.00pm) வரை மோட்டார் சைக்கிளை பார்வையிட முடியும்.

(CS61187) N-1

தலைவர்

## மரண அறிவித்தல்



தோற்றம் 07 . 04 . 1935 — மறைவு 05 . 04 . 2026

### பவளம்மா வெள்ளைச்சாமி

மண்கும்பானை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் நாவலர் வீதியை வாழ் விடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட பவளம்மா - வெள்ளைச்சாமி லண்டனில் கடந்த 05.04.2026 ஞாயிற்றுக்கிழமை சிவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வெள்ளைச்சாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற லோகநாதன் (கனடா) மற்றும் நாகேஸ்வரி (ஜேர்மன்), பரமேஸ்வரி (ஓய்வுபெற்ற தாதியச் சகோதரி - யாழ்ப்பாணம்), காலஞ்செனற் ஜெகதீஸ்வரி, ஸ்ரீகாந்தகணநாதன் (லண்டன்), காலஞ்செனற் பிரேமாவதி (ஜேர்மன்) மற்றும் மங்களேஸ்வரி (லண்டன்), சுரேந்திரநாதன் (ஜேர்மன்), வனஜநாதன் (ஜேர்மன்), நிமலநாதன் (ஜேர்மன்) ஆகியோரின் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.04.2026) அன்று ஞாயிற்றுக் கிழமை லண்டனில் Hendon Crenatorcum (North Chapel) NW7 INB எனும் இடத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மகள் - பரமேஸ்வரி பாலசூரியன்
(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்)
மகள் - மங்களேஸ்வரி (லண்டன்)
**073 651 35405**

(cs 61189) N-1

## மரண அறிவித்தலும் அஞ்சலி நிகழ்வுகளும்



### மகாலிங்கசிவம் சாரதாதேவி

நயினாதீவு கனடா

நயினாதீவு 8ம் வட்டாரம் அறுகந்தறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட மகாலிங்கசிவம் சாரதாதேவி அவர்கள் கடந்த (30.03.2026) திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரேசு - அன்னபூரணி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற கந்தையா - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், மகாலிங்கசிவம் JP (கனடா)அவர்களின் பாசமிகு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நாளை (12.04.2026) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். அதேவேளையில் (12.04.2026) அன்று நயினாதீவு அறுகந்ததை, 8ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இறுதி அஞ்சலி நிகழ்வு காலை 08.00 மணி தொடக்கம் பிற்பகல் 04.00 மணிவரை நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
VRK சிவஞானசுந்தரம் (ஞானம்) சகோதரன்
இல.58/10 செட்டித்தெரு, நல்லூர்.
077 663 9304

(CS/61114) J-1

## மரண அறிவித்தல்



மலர்வு 03 . 05 . 1955 — உதிர்வு 04 . 04 . 2026

### திருமதி வசந்தராணி சிவசுப்பிரமணியம்

புங்குடுதீவு 6 ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடா மற்றும் புங்குடுதீவை வாழ்விடமாகவும் கொண்ட திருமதி வசந்தராணி சிவசுப்பிரமணியம் அவர்கள் கடந்த 04.04.2026 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி - அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான மருதப்பு - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் அவர்களின் பாசமிகு மனைவியும், சிவப்பிரியா (கனடா), சுதாகர் (கனடா), சந்திரகாஷ் (பவா- கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், பிறேமரூபன் (கனடா), சுபாசினி (கனடா), காசினி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஜான்சிராணி (ஜேர்மனி), இந்திராணி (ஜேர்மனி), பாலகிருஷ்ணன் (ஜேர்மனி), ராதாகிருஷ்ணன் (இலங்கை), ஆனந்தகிருஷ்ணன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கல்யாணி (பிரான்ஸ்), குணபாலன் (இலங்கை), ரஞ்சனி (ஜேர்மனி), காலஞ்சென்ற ஜமுனா மற்றும் கௌரி (இலங்கை) ஆகியோரின் மைத்துனியும், பிரணவன், நர்மதா, கல்கி, சாரல், நிவேஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.04.2026) சனிக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியிலிருந்து பார்வைக்கு வைக்கப்பட்டு நாளை (12.04.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, முற்பகல் 11.00 மணியளவில் புங்குடுதீவு கேரதீவு மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புங்குடுதீவு - 6

தகவல்:
**குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு:
சுதாகர் - மகன் (கனடா) 416 843 7422
பவா - மகன் (கனடா) 416 837 5395
பாரதி - தம்பி (ஜேர்மனி)491 768 496 9712
பாலன் - தம்பி (ஜேர்மனி) 491 761 086 7076
[illegible] (இலங்கை) 9477 1967 450
ந.வில்வநாதன் (இலங்கை) 94 777 703 907

(cs 31651) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media

# பௌத்தத்துக்கு உரியதே வெடுக்குநாறிமலை

## பௌத்த சாசன அமைச்சர் தெரிவிப்பு



### வர்த்தமானி வெளியிடவும் நடவடிக்கை

கொழும்பு, ஏப். 11

வெடுக்குநாறிமலையில் உள்ள மத அடையாளங்கள் பௌத்த மதத்துக்கு உரியவை. எனவே, வர்த்தமானி அறிவித்தல் மூலம் அதைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாறு பௌத்த சாசன அமைச்சர் சுனில் செனவி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் அவர் தெரிவித்ததாவது:

வெடுக்குநாறி மலையில் உள்ள சான்றுப் பொருள்கள் பௌத்த அம்சங்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளன. இது கி.மு. 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த குகை கல்வெட்டுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள சட்டவிரோத கட்டுமானங்களால் பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளன. இத்தகைய கட்டுமானங்கள் அந்த இடத்தின் தொல்பொருள் நிலப்பரப்பை சேதப்படுத்தியுள்ளன. இது தொடர்பாக தொல்பொருள் திணைக்களம் ஏற்கனவே சட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அந்தப் பகுதியில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு எவருக்கும் தடையில்லை. ஆனால், தொல்பொருள் சின்னங்களை சேதப்படுத்தாத வகையில் அமைய வேண்டும்-என்றார். (ம)

வெடுக்குநாறிமலை விவகாரம்

# அநுர அரசின் செயற்பாடுகளால் இன முரண்பாடுகள் அதிகரிக்கும்

## டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 11

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விடயத்தில், அநுர அரசின் செயற்பாடுகள் காரணமாக இன முரண்பாடுகள் அதிகரிக்கும் இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வெடுக்குநாறி மலையில் பௌத்த சமயத்துடன் தொடர்புடைய சான்றுகள் அதிகமாக இருப்பதாகவும் அதனடிப்படையில் அந்தப் பகுதியை பௌத்தத்துக்கு உரியதாக அடையாளப்படுத்தி வர்த்தமானி அறிவிப்பை வெளியிடவுள்ளதாக துறைசார் அமைச்சர் அண்மையில் கூறியுள்ளார். அமைச்சரின் கருத்தை நாங்கள் கடுமையாகக் கண்டிக்கின்றோம்.

அமைச்சரின் நடவடிக்கை இனங்களுக்கு இடையில் பதற்றத்தை ஏற்படுத்தும் வகையிலும், நம்பிக்கையீனத்தை அதிகரிக்கும் விதமாகவும் அமைந்பௌத்த சாசன அமைச்சர் தெரிவிப்பு வர்த்தமானி வெளியிடவும் நடவடிக் கை துள்ளது. எமது ஆட்சியில் இத்தகைய வர்த்தமானி அறிவிப்புகள் வெளியிடுவதை நாங்கள் முற்றாகத் தவிர்த்திருந்தோம். தற்போது மீண்டும் அத்தகைய சம்பவத்தை மேற்கொள்வது உண்மையில் அதிருப்திக்குரிய விடயமாகும். இந்த விடயத்தில் உண்மையை விளக்கி ஜனாதிபதி அநுரவுக்கு விரைவில் கடிதமொன்றை அனுப்பிவைக்கவுள்ளேன் -என்றார். (ம)


ஓம் சாய் ராம்



**காணி விற்பனைக்கு**

தனங்கிளப்பு சந்தியில் இருந்து
**600 m** தூரத்தில் **20** பரப்பு காணி
**16** அடி பாதையுடன் இரண்டு இரண்டு
பரப்பாக பிரித்து கொடுக்கப்படும்

- நல்ல தண்ணீர்
- நல்ல சூழல்
- வீடு கட்டுவதற்கு உகந்த இடம்
- **200 m** தூரத்தில் கடற்கரை



விலை: 1 பரப்பு 5 லட்சம்


0776763409
0775519710
0767505423

(CS 31588) A


வவுனியாவில்

# அடிகாயங்களுடன் சடலமொன்று மீட்பு

## கொலை எனச் சந்தேகம்



வவுனியா, ஏப். 11

வவுனியா கூமாங்குளம் பகுதியில், 72 வயதுடைய முதியவர் ஒருவர் நேற்றுமுன்தினம் அடிகாயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வவுனியா கூமாங்குளம் பகுதியைச் சேர்ந்த குறித்த முதியவர் தனது வீட்டை பிறிதொரு தரப்புக்கு வாடகைக்கு வழங்கியிருந்த நிலையில், அந்த வீட்டின் மலசல கூடத்தில் இருந்தே நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலத்தில் சந்தேகத்துக்கு இடமான காயங்கள் உள்ள நிலையில், பல்வேறு கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-110)


## 5ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 10.03.1946 — இறப்பு 04.04.2021



யாழ். [illegible]ரிப்பாயைப் பிறப்பிடமாகவும், நவாலி, ஜேர்மனி Bottrop, லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

**அமரர் கந்தையா தர்மரட்ணம்**
**(திதி:10.04.2026)**

வாழ்க்கை என்பது இறைவன்
அவன் வகுத்த வரைதானே அடுக்கடுக்காக
ஆண்டுகள் 5 சென்றன
அருகில் நீங்கள் இல்லாததால்
உங்கள் அன்பு தனை இழந்தோமே நாம்!
அடுத்தொரு பிறப்பு உண்டென்றால்
அப்பொழுது மட்டுமல்ல- ஏழேழு பிறப்பிலும்
எமக்கே அப்பாவாய் பிறந்திட வேண்டுகிறோம் அப்பா!
வானத்தை விட்டு நிலவையும் வாசத்தை விட்டு மலரையும்
பிரிக்க முடியாது- அதுபோல உங்கள் நினைவுகளை-
எங்கள் நெஞ்சை விட்டும் விலக்கமுடியாது
நெஞ்சில் உங்கள் நினைவுகளை சுமந்தே
நெடுங்காலம் நாம் இங்கே நிலைத்து வாழ்வோமே
வானில் விண்மீனாய் இருந்து எம் வாழ்வை வளப்படுத்துவீரே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்!

குடும்பத்தினர்,
0044 7947342231

## மரண அறிவித்தல்

தோற்றம் 18.12.1955 — மறைவு 10.04.2026



**சுப்பிரமணியம் மகேஸ்வரன்**
(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)

காரைநகரைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கு, ஆடியபாதம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் மகேஸ்வரன் (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர் யாழ் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி) அவர்கள் நேற்று (10.04.2026) வெள்ளிக்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பவளரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், உமாகாந் (Emerchemie Pvt. Ltd), விஷ்ணுகாந் (வைத்தியர் - வவுனியா பொது வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், சர்மிளாவின் அன்பு மாமனாரும், ஹரினி, ஆதர்ஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.04.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 09.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லபடும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
075 038 6066, 077 625 7954,
075 584 1079

இல.99, ஆடியபாதம் வீதி,
கொக்குவில், யாழ்ப்பாணம்.

(cs 61189 ) N-1


Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media





# அமெரிக்காவுக்கு எதிராக வவுனியாவில் போராட்டம்

வவுனியா, ஏப்.11


அமெரிக்காவினால் கியூபா மீது விதிக்கப்பட்ட மிகப்பெரிய பொருளாதாரத் தடையை நீக்கக்கோரி வவுனியா, இலுப்பையடியில் நேற்றுமுன்தினம் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தை 'கியூபாவைப் பாதுகாப்போம்' என்ற இயக்கம் மற்றும் சமூக வெகுஜன அமைப்பும் இணைந்து முன்னெடுத்தன. அதில் துண்டுப்பிரசுரங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டதுடன், பொதுமக்கள் பங்கேற்றுக் கையொப்பமிட்டனர். (ச-110)

கெங்காதேவி நற்பணி மன்றம் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை பருத்தித்துறை பண்ணையம்பதியில் இடம்பெற்றது. மன்றத்தின் தலைமைக் காரியாலயத்தை ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் சி.வேந்தன் நாடா வெட்டிச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தார்.

இந்த மன்றம் மூலம் கல்விசார் செயற்பாடுகள், கலை மற்றும் ஆன்மிகச் சார் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளதுடன் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் பொருளாதார நலிவுற்ற குடும்பங்களுக்கு உதவிகள் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-41-66)





# செயற்பட்டு மகிழ்வோம்

முல்லைத்தீவு, ஏப்.11

மு.கலைவாணி முன்பள்ளியும், மு.அலைமகள் முன்பள்ளியும் இணைந்து நடத்திய செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மூன்று முறிப்பு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் இடம்பெற்றது. பாடசாலை முதல்வர் சின்னராசா பத்மதாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் துணுக்காய் கல்வி வலய ஆரம்பப் பாடசாலை அதிபர்கள், மாந்தை கிழக்கு பிரிவுக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர். இதன்போது மாணவர்களின் விளையாட்டு நிகழ்வுகளும், பரிசில் வழங்கலும் நடைபெற்றன. (எ-41-35)


## சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் புதிய கட்டடத்துக்கு அடிக்கல்!

யாழ்ப்பாணம், ஏப்.11

யாழ்.சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 3 மாடிகளையும், 30 வகுப்பறைகளையும் கொண்ட புதிய கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நடுகை நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கல்லூரி வளாகத்தில் பாடசாலை அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (ச-66)







கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெற்ற உலக சுகாதார நாள் நிகழ்வில், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ந.நிருபன் போதை தொடர்பில் சிறப்பு விழிப்புணர்வு உரையாற்றினார். (க-17)

# பொதுச்சுகாதார நடைமுறைகள் பருத்தித்துறையில் தெளிவூட்டல்



யாழ்ப்பாணம், ஏப்.11

பருத்தித்துறை நகரசபையின் ஏற்பாட்டில் பருத்தித்துறை வர்த்தகர்களுடனான விசேட கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. பொதுச்சுகாதார நடைமுறைகள், உணவுச் சட்டங்கள் தொடர்பில் உணவகங்கள், உணவு கையாளும் நிலையங்கள், பழக்கடைகள் மற்றும் பலசரக்கு கடைகளின் உரிமையாளர்களுக்கு தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டன. நகரசபை பொதுச்சுகாதார பரிசோதகர் ப.தினேஸ் தெளிவூட்டல்களை [illegible] கலந்துரையா[illegible] துறை வர்த்தகர் சங்கத் தலைவர் இரா.மயூதரன், செயலாளர் சி.சிறீபிரகாஸ், பொருளாளர் த.ஆதித்தன் உள்ளிட்ட வர்த்தகர் சங்க நிர்வாகத்தினர், நகர சபை உத்தியோகத்தர்கள், [illegible]றிருந் [illegible] (ச-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media

# யானைகளின் அச்சுறுத்தல்; பாதுகாப்பு வேலி அமைப்பு

## கிளிநொச்சியில் நடவடிக்கை

கிளிநொச்சி, ஏப்.11

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பொதுமக்களின் வாழ்விடங்களுக்குள் புகுந்து அச்சுறுத்தல் விடுத்துவரும் யானைகளின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த, இடைநிறுத்தப்பட்டிருந்த பாதுகாப்பு வேலி அமைக்கும் பணிகளை உடனடியாக மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலர் சு. முரளிதரன் தெரிவித்துள்ளார்.

குறித்த திட்டம் தொடர்பிலான முன்னேற்பாட்டுக் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் சில முரண்பாடுகள் மற்றும் நிர்வாகச் சிக்கல்கள் காரணமாக பாதுகாப்பு வேலி அமைக்கும் பணிகள் பாதியிலேயே நிறுத்தப்பட்டிருந்தன. எனினும், மக்களின் உயிர் மற்றும் சொத்துப் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு இந்த வருடத்துக்கு இப்பணிகளை விரைவாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. யானைகளின் நடமாட்டம் அதிகமுள்ள பகுதிகளைத் துல்லியமாகக் கண்டறிந்து, பொருத்தமான இடங்களில் வேலிகளை அமைப்பதற்காகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் இணைந்து உடனடியாகக் களஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

வேலிகள் அமைக்கப்பட்ட பின்னர், அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சுத்தமாகவும், தொடர்ச்சியாகப் பராமரிக்கப்பட்ட நிலையிலும் வைத்திருக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வனவளத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-113)



## கோடை விளையாட்டு விழா

# கரப்பந்தாட்ட இறுதியில் கெருடாவில் ஐக்கியம்!

யாழ்ப்பாணம், ஏப்.11

வல்வெட்டித்துறையில் நடைபெற்று வரும் 2026 ஆம் ஆண்டுக்கான கோடைகால பெரு விளையாட்டு விழாவின் ஆண்கள் கரப்பந்தாட்டத் தொடரில், கெருடாவில் ஐக்கியம் அணி முதலாவது அணியாக இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

கடந்த புதன்கிழமை இரவு நடைபெற்ற விறுவிறுப்பான முதலாவது அரையிறுதி ஆட்டத்தில், பலம் வாய்ந்த வல்வை ஆதிசக்தி அணியை எதிர்கொண்ட கெருடாவில் ஐக்கியம் அணி அபாரமாக விளையாடி வெற்றியைத் தன்வசப்படுத்தியது.

இதன்மூலம் அந்த அணி இறுதிப்போட்டிக்கு நேரடியாகத் தகுதி பெற்றுள்ளது. (ச-100)

## காண்பியக் காட்சி

யாழ்ப்பாணம், ஏப். 11

சர்மிலா சூரியகுமாரின் 'எல்லையற்ற வளையங்கள்: மரம்/நினைவுகள்' என்ற தொனிப்பொருளில் அமைந்த காண்பியக் காட்சி இன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

கண்டி வீதியில் அமைந்துள்ள 'கலம்' அலுவலகத்தில் இன்று மாலை 5 மணிக்கு காட்சித் திறப்பு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து, நாளை, நாளைமறுதினம், எதிர்வரும் 18, 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் காலை 10 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை காட்சிப்படுத்தல் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## எரிபொருள்...

இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக, சில நாடுகள் எரிபொருள் நெருக்கடியைச் சந்தித்து வருகின்றன. ஆனால், இலங்கையில் அவ்வாறானதொரு நெருக்கடி எக்காலத்திலும் ஏற்படாது. ஏனெனில், இலங்கைக்குத் தேவையான உதவியை வழங்குவதற்கு சீனா தயாராக உள்ளது. எந்தச் சந்தர்ப்பத்திலும் இலங்கையில் எரிபொருள் நெருக்கடி ஏற்படாது என்பதை உறுதியாகக் கூறுகின்றோம்.

ஒருவேளை இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் சூழல் உருவானால், இலங்கையில் இயங்கி வரும் சீனாவின் 'சினோபெக்' நிறுவனம் ஊடாக அந்த நிலைமையை வெற்றிகரமாகக் கையாள முடியும். சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவின் அடையாளமாக, இந்த நெருக்கடியை எதிர்கொள்வதற்கு நாங்கள் நிச்சயம் துணைநிற்போம் - என்றார். (அ-ம)

## சென். மேரிஸ்...

மாநகரசபையின் அமர்வு மேயர் மதிவதனி தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போது, தேசியத்தில் கிண்ணம் வென்ற நாவாந்துறை சென். மேரிஸ் அணியை யாழ்ப்பாணம் மாநகரசபை கௌரவிக்க வேண்டும் என்று பிரதி முதல்வர் இமானுவேல் தயாளன் கோரிக்கையை முன்வைத்தார். அந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டு, சபையினரால் பாராட்டும் வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன், அணியினரை அழைத்து கௌரவிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (அ-ம-26)

## நம்பிக்கையில்லாத்...

கரியை இறக்குமதி செய்த விடயத்தில், வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிராக எதிர்க்கட்சிகளால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இதன் மீதான வாக்கெடுப்பு நேற்று மாலை நடத்தப்பட்டது. இதன்போதே, 104 மேலதிக வாக்குகளால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது. தீர்மானத்துக்கு ஆதரவாக 49 வாக்குகளும், எதிராக 153 வாக்குகளும் செலுத்தப்பட்டன. (அ-ம)

## காக்கைதீவு...

சுட்டிக்காட்டியுள்ளார். யாழ்ப்பாணம் மாநகரசபையின் நேற்றைய அமர்வின்போது, காக்கைதீவு மறுசுழற்சி மையம் தொடர்பான பல விடயங்களை உறுப்பினர் மதுசிகான் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காக்கைதீவுப் பகுதியில் அமைந்துள்ள யாழ். மாநகர சபையின் மீள்சுழற்சி மையமானது, தற்போது வெறும் குப்பைக் கிடங்காகவே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மறுசுழற்சிக்கு ஏற்ப தரம்பிரித்து அங்கு கழிவுகள் அகற்றப்படுவதில்லை. பிளாஸ்ரிக், பொலுத்தீன் கழிவுகள் அனைத்தும் மிகச் சாதாரணமான முறையில், பொறுப்பற்ற தனமாக தரம்பிரிக்காமல் வீசப்படுகின்றன. இதுவே அங்கு அடிக்கடி ஏற்படும் தீ விபத்துகளுக்கு மிக முக்கிய காரணமாகும். இதனால் எனது 10ஆம் வட்டாரப் பகுதி முழுவதும் பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது.

குறிப்பாக, கடந்த மார்ச் மாதம் 14ஆம் திகதி ஏற்பட்ட தீ விபத்து மிகப்பெரியளவில் இருந்தது. இதன்போது வெளியேறிய கரிய நச்சுப்புகை அந்தப் பகுதி முழுவதையும் கடுமையாகப் பாதித்தது. ஆனால், இவ்வாறான பெரும் தீப்பரவலை எதிர்கொள்ளும் ஆற்றல் மாநகசபைக்கு இல்லை. இதனால், மார்ச் மாதம் 14ஆம் திகதியன்று ஏற்பட்ட தீயை அவர்களால் கட்டுப்படுத்த முடியாமல் போனது.

நிலைமையின் தீவிரத்தை கருத்திற்கொண்டு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கவனத்துக்கு விடயத்தைக் கொண்டு சென்றேன். இதன் விளைவாக இடர்முகாமைத்துவ அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்து, கடற்படை மற்றும் விமானப்படையின் உதவியுடன் தீப்பரவல் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

சம்பவத்தின் போது களத்துக்கு வந்த மத்திய சுற்றாடல் அதிகாரசபையினர் திறந்த வெளியில் பிளாஸ்ரிக் எரிக்கப்பட்டதை உறுதிப்படுத்தி, ஆணையாளருக்கு எச்சரிக்கைக் கடிதம் வழங்கினார்கள். ஆனால், இன்றுவரை காக்கைதீவு மறுசுழற்சி மையம் குப்பைக்கிடங்காகவே பயன்பட்டு வருகின்றது. இந்த விடயத்தில் சபை காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் - என்றார். (அ-ம-26)

## யாழ்...

உறுப்பினர் குமணதாசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் மாநகரசபை உறுப்பினர்களுக்காக இன்றையதினம் அசைவ உணவுகள் பெறப்பட்டுள்ளன. நல்லூர் ஆலயத்தின் புனிதச் சூழலில் அமைந்துள்ள இந்தச் சபையில் இவ்வாறான செயற்பாடு இடம்பெற்றுள்ளது. ஆனால், இதே புனிதச் சூழலில் அமைந்திருந்த அசைவ உணவகம் ஒன்றுக்கு எதிராக போராட்டங்களை நடத்தி அந்த உணவகத்தைச் செயற்பட விடாமல் தடுத்தார்கள். எனவே, யாழ்ப்பாணம் மாநகரசபையின் அமர்வுகள் வெள்ளிக்கிழமைகளில் நடைபெற்றால், ஆலயத்தின் புனிதச் சூழலைக் கருத்திற்கொண்டு அசைவ உணவைத் தவிர்க்க வேண்டும் - என்றார். (அ-ம-26)

## 700 மில்லியன்...

வருகின்றது. 5ஆம் மற்றும் 6ஆம் கட்ட மீளாய்வுப் பணிகள் அண்மையில் இடம்பெற்றன. இதைத் தொடர்ந்தே, இலங்கைக்கு 700 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்க நாணய நிதியத்தின் அதிகாரிகள் மட்டத்தில் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை ஒப்புதல் வழங்கும் பட்சத்தில், அந்த நிதி இலங்கைக்கு வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## தரமற்ற...

மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இந்த விசாரணை ஆணைக்குழுவில், தற்போது பணியில் உள்ள உயர்நீதிமன்ற நீதியரசர்கள் இடம்பெறுவார்கள் என்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க மேலும் கூறினார். (அ-ம)

## மின்சக்திப்...

பேராசிரியர் டி.எம்.டபிள்யூ.ஜே.பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர்ச் சூழல் உலகளாவிய விநியோகச் சங்கிலியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால் எரிபொருள்களைப் பெறுவதில் நாங்கள் பெரும் சவாலை எதிர்கொண்டுள்ளோம். எனவே, பண்டிகைக் காலத்தில் பொதுமக்கள் மிகவும் சிக்கனமான முறையில் மின்சாரத்தைப் பயன்படுத்த வேண்டும். மின்நுகர்வு அதிகம் உள்ள இரவு 6 மணி தொடக்கம் 10 மணிவரையான காலப் பகுதியில் தேவையற்ற மின்பயன்பாட்டைத் தவிர்ப்பது அவசியமானது. நெருக்கடி நிலையில் இருந்து நாட்டை மீட்பதற்கு பொதுமக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டியது அவசியம் - என்றார். (அ-ம)

## அமெரிக்காவைக்...

போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி, முன்னிலை சோசலிசக் கட்சி ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-ம-66)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சூரியவன்சி அதிரடி, ஜுரெல் அபாரம்

# பெங்களூருக்கு நேற்று விளாசியது ராஜஸ்தான்

**ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில், சூரியவன்சியின் அதிரடி ஆட்டமும், ஜுரெலின் நிதானமும் கைகொடுக்க பெங்களூரை இலகுவாகத் தோற்கடித்தது ராஜஸ்தான்.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் அணி களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 201 ஓட்டங்களைப் பெற்றது.



அதிகபட்சமாக படிதார் 69 ஓட்டங்களையும், கோலி 32 ஓட்டங்களையும், வெங்கடேஸ் ஐயர் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குக் களமிறங்கிய ராஜஸ்தான் அணிக்கு, தனது அதிரடி ஆட்டத்தின் மூலம் பலம் சேர்த்தார் சூரியவன்சி. வெறும் 26 பந்துகளில் 7 சிக்சர்கள் அடங்கலாக 78 ஓட்டங்களைப் பெற்று அவர் ஆட்டமிழந்தார். அவரின் அதிரடி ஆட்டம் ஏனைய வீரர்களின் சுமையைப் பாதியாகக் குறைத்தது. ஹெட்மயர் ஓட்டம் எதையும் பெறாமலும், ரியான் பராக் 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தாலும், ஜுரெல், ஜடேஜா இணைந்து பொறுப்பான வகையில் ஆட்டத்தை நகர்த்திச் சென்றனர். முடிவில் 2 ஓவர்கள் மீதமிருக்க ராஜஸ்தான் வென்றது. ஜுரெல் 81 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். சூரியவன்சி ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

(ம)

**காசாளர் தேவை**

நல்லூரில் இயங்கிவரும் குளிர்பான நிலையத்திற்கு காசாளர் மற்றும் உணவு பரிமாறுபவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். உடன் தொடர்புகொள்ளவும்.

**தொடர்பு: 077 651 0009**

(CS 31589) A

**வேலையாள் தேவை**

யாழ் சாவகச்சேரிப்பகுதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றின் களஞ்சிய பொறுப்புக்களையும், கணக்குகளையும் நிர்வகிப்பதற்கான ஆண் அலுவலர் தேவை. (கணனியில் விபரங்களை பதிவு செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்) 25-35 வயதுக்கு உட்பட்டவர் விரும்பத்தக்கது.

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

**தொடர்பு: 076 941 9687**

**பழைய பட்டுப்புடைவைக்கு உடனடி பணம்!**

**பழைய பட்டுப்புடைவை மணமாகிறது!**

**பழைய (கிழிந்த)**

*** பட்டுப்புடைவைகள் * பட்டு வேஷ்டிகள்.**

*** பட்டுப் பாவாடைகள்.**



பழைய கிழிந்த கூறைப்புடைவைகள், எந்த நிலையில் இருந்தாலும் நல்ல விலைக்கு வாங்கிக்கொண்டு உடனே பணம் தரப்படும்.

(CS 31586) A

**நல்லூர் கந்தசாமி சில்க்ஸ்**

**0770 28 58 86**

போன் செய்தால் போதும் உங்கள் வீடு வந்து பெறப்படும்

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## மாதர் மகாலிங்கம்

தோற்றம் 02.06.1944 | மறைவு 03.04.2024

**திதி: பங்குனி தேய்பிறை நவமி**
**11.04.2026**

எண்மூன்று திங்கள் கடந்தபோதும் - உம்
நினைவுகள் நித்தம் நெஞ்சினில் மோதும்
அப்பா நீங்கள் செப்பிய வார்த்தைகள் - என்றும்
ஆயுள் குன்றாமல் செவிகளில் வாழும்
கற்றுத் தந்த வாழ்க்கைப் பாடத்தை
பற்றிப் பணியாற்றி நடக்கின்றோம் நாளும்.

சிரமத்தில் செய்வதறியாது இருந்த நேரத்தில்
சிரித்த முகத்தோடு தோள் தந்தீர்
ஊருக்கும் உறவுக்கும் உற்றோருக்கும்
மற்றோருக்கும் வழிகாட்டியாய் வந்தீர்

நீக்கமற நின்றிருந்தோம் உங்கள் நிழலில்
சிக்கித் தவிக்கின்றோம் காலச் சுழலில்.

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் இன்று (11.04.2026) சனிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**பழம் றோட்,**
**ஆனைக்கோட்டை,**
**யாழ்ப்பாணம்**

(cs.61183) (N-1)

**பிரிவால் வாடும்**
**குடும்பத்தினர்**

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] 361 [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.04. 2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org